**26.10.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற விவசாய கோரிக்கைதினக் கூட்ட நடவடிக்கைகள்**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் அக்டோபர் 2017 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 26.10.2017 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகளிடம் இருந்து விவசாய கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு கூட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் மற்றும் கூட்டுப்பண்ணைய குழுவின் முக்கியத்துவம் குறித்த துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டு விவசாயிகளுக்கு வழங்கினார்கள்.

பேச்சிப்பாறை அணை நீரை நாகர்கோவில் நகராட்சி குடிநீருக்கு பயன்படுத்துவது தொடர்பாக எழுப்பப்பட்ட வினாக்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் பதில் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 21.09.2017 அன்று நடைபெற்ற விவசாய கோரிக்கைதினக் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வாசிக்கப்பட்டது.

அழகப்பபுரம் கிராமம் பள்ளகுளம், செங்குளம், செட்டிகுளத்திற்கு தண்ணீர் வழங்கவும் மற்றும் செயற்கை மழை கொண்டு வருவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க கேட்டு திரு.பீட்டர் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை அழகப்பபுரம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள பள்ளகுளத்தில் 70%, செங்குளத்தில் 40%, செட்டிகுளத்தில் 50% தண்ணீர் உள்ளது எனவும் செயற்கை மழை கொண்டு வருவது குறித்து அரசு மட்டத்தில் தான் முடிவு செய்ய இயலும் எனவும் தெரிவித்தார்.

பரம்பரை நாட்டு ஒட்டன்மலை மாடுகளை மலைகளில் மேய்க்க மேய்ச்சல் சீட்டும் மற்றும் மலைகளில் தங்கி மேய்க்க பட்டிச்சீட்டும் வழங்க கேட்டு திரு.வலம்புரிராஜா வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த மாவட்ட வன அலுவலர் கன்னியாகுமரி கோட்டமானது வன உயிரின சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் இக்கோட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதிகளில் கால்நடைகளின் மேய்ச்சல் அனுமதி சீட்டு வழங்குவது நிறுத்தப்பட்டு கால்நடைகளின் மேய்ச்சல் தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழை மரங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம் விநியோகம் செய்யப்பட்டதா• என கேட்டு திரு.தங்கராஜ் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த தோட்டக்கலை துணை இயக்குநர் வறட்சியால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலை விவசாயிகளுக்கு 2-ம் கட்டமாக 347 நபர்களுக்கு 144.153 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.17,65,487/-க்கு வறட்சி நிவாரணம் வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்கள் மூலம் அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அரசிடமிருந்து நிவாரணம் கிடைக்கப்பெற்றவுடன் சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் (இடுபொருள் மானியம்) வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் மானியவிலையில் பால்கறக்கும் எந்திரம் கேட்டு அவர் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த பொது மேலாளர், கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் கறவை மாடு வைத்திருப்போருக்கு முழு மானியத்திலோ அல்லது பகுதி மானியத்திலோ பால் கறவை இயந்திரம் வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை என தெரிவித்தார்.

குளங்கள் தூர்வாருதல் தொடர்பாக விவசாயிகள் செலுத்திய ஏற்றுக்கூலியை திரும்ப வழங்க கேட்டு திரு.பார்த்தசாரதி வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை அரசாணை எண் 50-ன்படி குளங்களில் வண்டல்மண் வழங்க ஏற்றுக்கூலியாக ஒரு கனமீட்டருக்கு ரூபாய் 35.20/- என அரசின் மூலம் நிர்ணயிக்கப்பட்டு வங்கி வரைவோலையாக அனுமதிக்கப்பட்ட விவசாயி மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மேற்படி தொகையினை அனுமதிக்கப்பட்ட நபருக்கு திருப்பி வழங்க வழிவகை இல்லை எனவும் தெரிவித்தார்.

பறக்கை குளம், கால்வாய் பராமரிப்பு தொடர்பாக திரு.லிவிங்ஸ்டன் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை பறக்கை குளம் மற்றும் பால்குளத்திற்கு தண்ணீர் செல்லும் பறக்கின் கால்வாயில் நகராட்சி மூலம் நேரடியாக வடிகால்கள் இணைக்கப்பட்டுள்ளதால் மழைகாலங்களில் மண்குவிந்தும், சாக்கடைகள் கலந்தும் காணப்படுவதால் நீர் போக்கு தடைபட்டு தண்ணீர் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலையுள்ளது எனவும் மேலும் இப்பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாகத்திற்கு பல கடிதங்கள் எழுதப்பட்டுள்ளது எனவும் துறை மூலமும் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது எனவும் விரைவில் தூர் வாரும் பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருத்தல், எல்கை, மகாசபை கூட்டம், லாபம் பங்கு விவசாயிகளுக்கு கொடுத்தல், செயலர் நீக்கப்பட்டு சேர்க்கப்பட்டது தொடர்பான விபரங்கள் கேட்டு திரு.சுந்தரமாணிக்கம் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் ஒரு விவசாயி அவர் வசித்து வருகின்ற சொந்த கிராமம் அல்லது விவசாய நிலம் கொண்டுள்ள கிராமத்தை விவகார எல்கையாகக் கொண்டுள்ள ஏதாவது ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம் எனவும் அரசாணை எண் 356 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள் 03.10.2006-ன்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அமைக்க சுமார் 2000 ஹெக்டேர் விவசாய நிலப்பரப்பு கொண்டுள்ளதாக இருக்க வேண்டும் எனவும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 60% உறுப்பினர்கள் கடன் பெறும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் சங்கத்தின் மகாசபை வருடத்திற்கு ஒருமுறை கூட்ட வேண்டும் எனவும் சங்கத்தின் பணியாளர் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை சங்க நிர்வாகம் தொடர்புடையது எனவும் தெரிவித்தார்.

தோவாளை பெரியகுளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி எல்கை நிர்ணயம் செய்ய திரு.கதிர்வேல் வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை புல எண் 673 –ல் அமைந்துள்ள தோவாளை பெரியகுளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறியும் பொருட்டு எல்கை நிர்ணயம் செய்ய வட்டாட்சியர், தோவாளை அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது எனவும் எல்கை நிர்ணயம் செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்புதாரர் விபரப்பட்டியல், மற்றும் வரைபடம் படிவம் I -ல் கிடைக்கப்பெற்றதும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் எனவும் தெரிவித்தார். இதுகுறித்து பதிலளித்த வட்டாட்சியர், தோவாளை பெரியகுளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரியது தொடர்பாக எல்கை நிர்ணயம் செய்ய 02.11.2017 அன்று நாள் குறிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அரசு அறிவித்தபடி குறுகியகால விவசாய கடன்களை மத்தியகால கடன்களாக மாற்ற திரு.பாபு வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் வறட்சி காரணமாக பயிர் பாதிப்படைந்த விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெற்றுள்ள பயிர்க்கடன்களை மத்தியகாலக் கடனாக மாற்றம் செய்வதற்கு அரசாணையில் அன்னவாரி சான்றிதழ் பெற்று வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் அரசாணைப்படியான அறிவுரை செயல்படுத்த அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் மத்திய கூட்டுறவு வங்கி சுற்றறிக்கை வழி தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் இப்பணியினை மேற்கொள்ள 31.08.2017 வரை காலநீட்டிப்பு செய்து வரப்பெற்ற சுற்றறிக்கையும் மத்திய வங்கி கடிதத்தின்படி அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அன்னவாரி சான்றிதழ் பெற்று 31.08.2017-க்குள் பயிர்க்கடன் பெற்றுள்ள சங்கத்தில் வழங்கியிருந்தால் பயிர்க்கடன் தொகை மத்திய கால கடனாக மாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

பயிர் காப்பீடு திட்டம் தொடர்பாக விவசாயிகள் பயிர் காப்பீடு பிரிமியம் செலுத்தும் முறை குறித்தும் காப்பீடு செய்வதன் நன்மைகள் குறித்தும், 2017-18 கும்பப்பூ நெல் பயிருக்கு காப்பீடு பிரிமியம் செலுத்துவதற்கான கடைசி தேதி 30.11.2017 எனவும் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர்.அசோக்குமார் விரிவாக எடுத்துரைத்தார்.

இறுதியில் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்ட ஆட்சியர்
நாகர்கோவில்

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்)